# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 20 | July ஜுலை | 2020

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




## மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்

எண்ணாகமம் 12:3


கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 9 |
| வாலிபர் பகுதி | 11 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L

அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு

மதியம் 3:30 மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6:45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை**

**நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**

### GOOD NEWS TELEVISION

WATCH GRACIOUS WORD PROGRAM IN ENGLISH

**EVERY TUESDAYS 8:30 p.m.**

Spekers : Bro. PHILEMON RAJAH

Bro. KINGSLY RAJAH



**கிருபையுள்ள வார்த்தை**

நமது ஆத்துமாவினை ஆரோக்கியமாக்கும்

ஆத்தும நேசரின் வார்த்தை

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


**Send Postal Expenses only**

**and**

**receive**

**The Voice of Truth**

**International Vol. 103**

# மோசேயின் விசுவாசம்
## FAITH OF MOSES

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள் !**

இந்த மாதம் நாம், மோசேயின் விசுவாசத்தைப் பற்றி **எபிரேயர் 11:24–28** ஆகிய வசனங்களிலிருந்து படிப்போம்.

### விசுவாசத்தினாலே மோசே செய்தவைகள்

விசுவாசத்தினாலே மோசே செய்தவைகளை சொல்லச்சொன்னால், நாம் பெரிய பட்டியலே தயாரித்துவிடுவோம். எகிப்திலே செய்தவைகள், வனாந்திர வழிப்பயணத்தில் செங்கடலை பிளத்தல், மாராவின் தண்ணீரின் கசப்பை தித்திக்க செய்தல், மன்னா, காடைகள், 10 கட்டளைகளை பெற்றுத்தந்தது, பரலோக கடவுளோடு நண்பனைப் போல பேசியது, யுத்தங்களை வென்றது, 6 லட்சத்திற்கும் அதிகமான யுத்த வீரர்களை கொண்ட இஸ்ரவேல் ராணுவத்தையும், மக்களையும் வழிநடத்தியது என்பவைகள் தான் நம் நினைவிற்கு உடனே வருபவைகளாக இருக்கும்.

ஆனால் எபிரேய ஆசிரியர், விசுவாசத்தினாலே மோசே செய்தவைகளை வேறுவிதமாக பட்டியலிடுகிறார். மோசேயைப் பற்றி படிக்க சொல்ல ஆரம்பிக்கும் போதே 'விசுவாசத்தினாலே மோசே ' என ஆரம்பித்து அவர் செய்தவைகளை விளக்குகிறார். விசுவாசத்தைக் கொண்டு மோசே என்னவெல்லாம் செய்தார் என்பதைவிட, விசுவாசம் வந்து அதில் வளர்ந்த பின்பு 'பெரியவனான போது', அந்த விசுவாசம் மோசேக்குள் என்ன மாற்றத்தை கொண்டு வந்தது என்பதை விளக்குகிறார். அதாவது, விசுவாசத்தினாலே மோசே செய்த அற்புதங்களை பட்டியலிடாமல், விசுவாசத்தினாலே மோசேக்குள் நடந்த பிரமிப்பான மாற்றங்களை எழுதுகிறார் **(எபி 11:24–28).**

விசவாசத்தினாலே மோசே விசுவாசத்தினாலே பெரியவனார் அது என்ன? விசுவாசத்தில் பிறத்தல், குழந்தை, சிறுபிள்ளை, பெரியவர் (முதிர்ச்சி ) என்றெல்லாம் உண்டு. நாம் பரலோக கடவுளுடைய வார்த்தையைக் கேட்டு, விசுவாசித்து மனந்திரும்பி, விசுவாச அறிக்கையிட்டு, திருமுழுக்கு பெறும் போது, விசுவாசத்தினால் மறுபடியும் பிறக்கின்றோம் **(யோவான் 3:1–6).** பரலோக கடவுள், கேட்டதை எல்லாம் தருவார் என்பது குழந்தை தனமானது. 'பரலோக கடவுள் நல்லதையெல்லாம் (நல்லதை மட்டும்) தருவார் என்பது சிறுபிள்ளைதனமானது. பரலோக கடவுள் தருவது எல்லாம், அதாவது இன்பம், துன்பம், நோய், ஆரோக்கியம், உயர்வு, தாழ்வு என அவர் தருவது எதுவாயினும் அது எல்லாம் நல்லது தான்' என்பது வளர்ந்த (முதிர்ச்சியான) விசுவாசமாகும்.

இப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் யோபிடமும் பார்க்க முடியும். **யோபு 1:21** "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்." தன் குழந்தை சாகாதபடி உபவாசித்து, அழுது வேண்டின தாவீது, அது செத்த பின்பு நடந்துக் கொண்டதிலிருந்து இப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் அறிய முடியும். **2சாமு 12:20** "அப்பொழுது தாவீது தரையைவிட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய்பூசிக்கொண்டு தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்."

விசுவாசத்தில் வளர்ந்த நிலை என்பது, பரலோக கடவுள் தனக்கு என்னவெல்லாம் செய்தார், மேலும் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை பட்டியலிடாமல், நான் அவருக்கு செய்ய வேண்டியது என்ன என்பதை நோக்கிப் பார்த்து, அவைகளை செய்வதாயிருக்கிறது. பரலோக கடவுள் என் வாழ்வில் அனுமதிப்பது எல்லாம் நல்லதே என்பது முதிர்ச்சியான விசுவாச நிலையில் ஒன்றாகும். நாம் விசுவாசத்தில் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை நமக்கு நாமே நிதானித்து அறிவோம்.

## விசுவாசத்தினாலே மோசே உலக மகிமையை வெறுத்தார்

**எபி 11:24** "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து,"

மோசேயின் விசுவாசம் அவனை உலக மேன்மையை வெறுக்க செய்தது. அவன் தன்னை பார்வோனின் குமாரத்தியின் மகனாக அதாவது இளவரசனாக தான் இருப்பதை வெறுத்தான். எகிப்து சாம்ராஜ்யம் கொடிகட்டி பறந்த அந்நாட்களில், ஒருவர் அந்த நாட்டில் குடிமகனாக இருப்பதே பெருமை என்ற வேளையில், மோசே தான் அந்த நாட்டின் இளவரசன் என்பதை வெறுத்தான். தனது மிகப்பெரிய பெருமைக்குரிய காரியத்தை அவன் முற்றிலும் வெறுத்தான். எகிப்தின் இளவரசன் என்பதைவிட, எபிரேய அடிமை என்பதே அவனுக்கு பெரிதாக இருந்திருக்க வேண்டும். ஆகையால் தான் அதை வெறுத்தான்.

இந்த உலகம் பெருமையாக நினைப்பதை, பேசுவதை மோசே பெருமையாக கருதவில்லை. இதை போன்ற மனோநிலையை, வைராக்கியத்தை நாம் அப்போஸ்தலனாகிய பவுலிடம் காண முடியும். **பிலிப்பியர் 3:1–11** வரை உள்ள வசனங்களில், இந்த உலகம் பெருமையாக நினைக்கிற குலம், கோத்திரம், அறிவு, படிப்பு, செல்வம் எல்லாவற்றையும் பவுல் அற்பமானவைகள் என்றும், குப்பை என்றும் தான் கருதுவதாக சொல்கிறார். என் ஆண்டவரை அறிகின்ற அறிவின் மேன்மைக்கு முன்பு அவைகள் எல்லாம் குப்பை என்று சொல்கிறார்.

கிறிஸ்துவை அறிகின்ற அறிவு, தினமும் வேதத்தை வாசித்து தியானிப்பதினாலும், வேதபாட வகுப்புகளில் கலந்து, கற்றுக்கொள்வதினாலும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் நம்மில் அநேகர் தினமும் அவசரமாக வாழ்கின்றோம் பைபிள் படிக்காமல், படித்ததை தியானிக்காமல், வேத பாட வகுப்புகளுக்கு செல்லாமல் வேலை, தொழில், பணம், படிப்பு, அறிவு என்பவைகளின் பின்னால் சென்று, ஆண்டவரை அறிகின்ற அறிவின் மேன்மையை சாதாரணமாக்குவது என்பது சாபக்கேடானது. ஏனெனில் "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." **(சங் 1:2).** மேலும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பது நம்மை நற்குணசாலிகளாகவும் **(அப் 17:11),** நித்திய வாழ்விற்கு பங்குள்ளவர்களாகவும் வழிநடத்தும் **(யோவான் 5:39).** **விசுவாசத்தினாலே மோசே துன்பங்களை அநுபவிப்பதை தேர்ந்தெடுத்தார்.** **எபி 11:25** "அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துக்கொண்டு,"

மோசே தனது விசுவாசத்தினால் இன்பங்களை துறந்து, துன்பங்களை தேர்வு செய்தது என்பது மிகவும் கடினமான முடிவு. ஆயினும் மிகவும் சரியான முடிவு. பாவத்தினால் வரும் சந்தோஷங்களை விட, பரிசுத்தமாக வாழ்வதினால் வரும் சிரமங்களை தேர்ந்தெடுத்தல் என்பது மிகவும் சவாலான காரியமாகும். ஆனால் மோசே பரிசுத்தமாகதான் தான் தேர்வு செய்தார்.

மகிழ்ச்சியாக மட்டும் இருக்க வேண்டும் என்ற மனிதன் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று, தன் விருப்பப்படி வாழ்கிறான். அப்படிப்பட்ட மகிழ்ச்சியின் முடிவு மாபெரும் துயரத்தில் முடியும் என்பதை அறிய தங்கள் மனதை அவர்கள் செலுத்துவதில்லை. அதனை பற்றி அறிவது அவர்களுக்கு அலுப்பான காரியமாயிருக்கிறது. ஆலோசனை சொல்பவர்கள் அவர்களுக்கு அறுவைக்காரர்களாக தெரிகின்றனர். ஆனால், தூய்மையாக வாழ வேண்டும் என்ற விருப்பமுடையவரே, வாழ்க்கைக்கான அர்த்தத்தை புரிந்து, நேர்மையாக வாழ்கின்றனர். அதினிமித்தம் வரும் சிரமங்கள் அவர்களை நிச்சயம் சிகரங்களில் கொண்டு சேர்க்கும் என்பதை அறிவார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் நீதியின் பாதையில் வரும் துன்பங்களை தான் அதிகம் விரும்புவதாக பறைசாற்றினார் **(2 கொரி 12:10).** ஆனால் இன்றைய நாட்களில் பரலோக பிதாவை மகிமைப்படுத்தும்படியாக சபைக்கூடுகைகளுக்கு செல்பவர்களைவிட, மகிழ்ச்சிக்காக செல்பவர்களே அதிகரித்து வருகின்றனர். அதின் விளைவு புதிய ஏற்பாட்டு சட்டத்திற்கு எதிராக நூதனமான போதனைகள். ஆடல் பாடல் கொண்டாட்டங்கள், கேளிக்கைகள் என அதிகரித்து வருகின்றது. இப்படி எல்லாம் செய்தால் தான் மக்கள் வருவார்கள் என சில சபைகள் அவர்களது மாம்ச இச்சைகளுக்கு தீனி

போட ஆரம்பித்து, தேவ நாமம் தூஷிக்கப்பட இடமளிக்கின்றனர். அவர்களை கேட்டால் நாங்கள் தாவீதை போல ஆடி பாடி தேவனை மகிமைப்படுத்தகிறோம் என்பார்கள். தாவீதின் ஆட்டம் பாட்டம் எல்லாம் தெருவில் தான் தேவாலயத்தில் இல்லை என்பதை அறியாதபடி சிற்றின்பத்தில் கண்சொருகிப் போன குருடராக இருக்கிறார்கள். நாம் எதனை தேர்வு செய்து வாழ்கிறோம்? நம்முடைய தேர்வு எதனை சார்ந்துள்ளது தேவனற்ற இன்பமா? தேவனோடு துன்பமா? நம்மை நாமே நிதானித்து அறிவோம்.

## விசுவாசத்தினாலே மோசே இனிவரும் பலனை நோக்கிப்பார்த்தார்

"எபி 11:26 இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்."

அடுத்ததாக மோசே விசுவாசத்தினாலே, இனிவரும் பலன்களை நோக்கிப் பார்ப்பவராக இருந்தார். இம்மைக்குரிய காரியங்களிற்காக பரலோக கடவுளை தேடுபவராக இல்லாமல், மறுமைக்குரிய காரியங்களிற்காக தேடுகின்ற மிகச்சிறந்த குணம் உடையவராக மோசே இருந்தார் என்பது மிகவும் சிறப்பான ஒன்றாகும். விசுவாச வீரர்களை பற்றி பைபிள் சொல்லும்போது அவர்கள் மறுமைக்காக அதாவது பரலோகத்திற்காக பரலோக கடவுளை தேடுபவராகளதகவே இருந்தனர் என்கிறது. **எபி 11:13–16** "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இ ப்படிஅ றிக்கையிடுகிறவர்கள் சு யதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே, அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே."

நாம் கடவுளை எதற்காக தேடுகிறோம்? அவரிடம் நம்முடைய மன்றாட்டு தான் என்ன? பரிசுத்தம், பரலோகம், சபை ஐக்கியம், இரட்சிப்பு, சத்தியம் சார்ந்தவைகளுக்காக அவரை தேடுகிறோமா? படிப்பு, வேலை, தொழில், திருமணம், குழந்தை, வீடு விருத்தி போன்றவைகளுக்காக தேடுகிறோமா? நம்முடைய மன்றாட்டுகளில் (ஜெபங்களில்) பெரும்பங்கை பிடிப்பது எது? உலகத்தில் அழிந்து போகப்போகின்றவைகளா? அல்லது நித்தியமானவைகளா? நாம் நிதானித்து அறிய வேண்டிய தருணங்கள் இப்பொழுது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை தவிர்த்து, இந்த உலகம் எதற்காக, எதை நோக்கி அவசரமாக ஓடிக்கொண்டிருக்கிறதோ, நாமும் அவைகளுக்காக உலகத்தின் பின்னே ஓடுகிறவர்களாய் இருந்துவிட வேண்டாம். ஏனெனில் அது மிகவும் பரிதாபத்திற்குரியது **1கொரி 15:19** "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்." இந்த பூமியில் வாழ்கின்ற நமக்கு படிப்பு, வேலை, தொழில், திருமணம், குழந்தை, வீடு விருத்தி போன்றவைகளெல்லாம் வேண்டாமா? என்று நாம் வினவினால், நாம் பரலோக கடவுளை பற்றியும், அவரது வல்லமை மற்றும் தன்மை பற்றியும் போதுமான அளவு அறியாமல் இருக்கிறோம். ஏனெனில் நமக்கு எது தேவையோ? எவ்வளவு தேவையோ? அவைகளை நிச்சயம் அவர் கொடுக்கின்றவராகவே இருக்கின்றார் **(மத் 6:31, 32, 7:11)**. அப்படி அவர் கொடாதவைகள் நமக்கு தேவையில்லாதவைகளே என்ற சிந்தையும் விசுவாசமும் நமக்கு வேண்டும்.

## விசுவாசத்தினாலே மோசே கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினார்.

**எபி 11:26** "இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து. எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்."

விசுவாசத்தினாலே மோசே செய்த அடுத்த காரியம் மிகவும் பிரமிப்பானது. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினிமித்தம் வரும் அவமானங்களை அதிக ஆசீர்வாதமாக எண்ணினார். இங்கே எண்ணினார் என்பது அவர் தீர்மானித்தார் என்ற பொருளில் உள்ளது. அது என்ன கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தை? நிறைய சொல்லலாம். உதாரணமாக, நாம் கிறிஸ்தவராக வாழ்வதினாலே மற்றவர்கள் நம்மை அவமானப்படுத்துவது. நம் வாழ்வில் உள்ள குறைகளை (உ.ம். குழந்தையின்மை) சொல்லி, இந்த உலகம் நம்மை அவமானப்படுத்துவது.

உங்க கடவுள் தான் உண்மை என்று சொல்லி, ஓயாமா சர்ச்சுக்கு (சபைக் கூடுகைக்கு) போனீங்க, பிறகு ஏன் உங்களுக்கு கடவுள் இந்த குறையை வைத்தார் என ஏளனமாக பேசி நம்மை அவமானப்படுத்தும் போது, நாம் அதனை எவ்வாறு எடுத்துக்கொள்கிறோம்? அவமானம் என்றா? ஆசிர்வாதம் என்றா? அழுகிறோமா? ஆனந்தப்படுகிறோமா? ஆண்டவர் சொன்னதை கவனியுங்கள் "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே." **(மத் 5:11-12).**

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நிமித்தம் வந்த அவமானங்களை எவ்வாறு எடுத்துக்கொண்டு, எப்படி செயல்பட்டார்களோ, நாமும் அப்படியே அவர்களது முன்மாதிரியை இந்த காரியத்தில் பின்பற்றுவோம். **அப் 5:40-42** "அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்."

அப்போஸ்தலர்கள் போல செயல்படுவதே, நமக்காக தன் ஜீவனையே தந்த ஆண்டவரை மகிமைப்படுத்துவதாகும். மாறாக பதிலிற்கு அவர்களை அவமானப்படுத்த வேண்டாம். அவர்கள் மீது கோபத்தையும் வைக்க வேண்டாம். தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் **(மத் 5:39),** தீமையை நன்மையினால் வெல்லு **(ரோ 12:21)** என்கின்ற வேத வசனங்களை நினைவில் கொள்வோம்.

## விசுவாசத்தினாலே மோசே அதரிசனமானவரை தரிசிக்கிறது போல உறுதியாக இருந்தார்

**எபி 11:27** "விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்."

விசுவாசத்தினாலே மோசே, அதரிசனமான பரலோக கடவுளை தரிசிக்கிறது போல உறுதியுடையவராக இருந்தார். ஆண்டவர் இயேசு தமது பிரசன்னத்தை பற்றி அறிவிக்கும் போது இவ்வாறாக கூறினார் "ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்." **(மத் 18:20).**

பரலோக ஆண்டவருடைய பிரசன்னத்தில் அமருவதை பற்றி "பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்." **(சங் 2:11)** என்று சங்கீதக்காரன் சொல்கிறார். நமது சபைக்கூடுகைகளில் நம்முடைய மாம்ச கண்களினால் நேரடியாக பார்க்க முடியவில்லை என்பதினால், ஆண்டவருடைய பிரசன்னம் இல்லை என்று பொருள்படாது. நாம் கூடுகையில் அவர் சொன்னபடியே நம் நடுவில் தான் இருக்கிறார். ஏனெனில் அவர் எவ்வளவேனும் பொய்யுரையாதவர். ஆகையால் தான் பயத்துடனே சேவிக்கும்படியாகவும், நடுக்கத்துடன் களிகூரும்படியாகவும் சங்கீதக்காரன் சொல்கிறார்.

மோசே, நேரடியாக அவரை காணாவிடினும் அவரை காண்பது போல உறுதியாக இருந்தார். காரணம் என்னவெனில், 'நான் உன்னை கடந்து போவேன், நீ என்னை காணமாட்டாய்' 'நீ எகிப்தியருக்கு பயப்பட வேண்டாம், நான் உன் கூட இருப்பேன்' என்று சொன்ன அவரது வார்த்தையின் மீது இருந்த விசுவாசம். இன்றைய நாட்களில் அநேக சபைக்கூடுகையில் 'கர்த்தரை சேவித்தல்' இருக்கிறது. ஆனால் அவருக்கு பயப்படும் பயம் இல்லை. 'களிகூறுதல்' இருக்கின்றது. ஆனால் அவரைப் பற்றிய நடுக்கம் இல்லை. ஆடல் பாடல் கூச்சல் கேலி கிண்டல் நாகரீகமற்ற பேச்சுக்கள் உடை நடைகள் என மாம்சத்திற்கு தீனி போடுகிற கொண்டாட்டமாக சபைக்கூடுகைகள் மாறிவருவதிலிருந்து இதை நாம் அறிய முடியும். நமது சபைக்கூட்டங்கள் நமது ஆத்துமாவை பெலப்படுத்தி, பரலோக கடவுளின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படியாக இருக்கிறதா? நமது சரீரத்தை திருப்திபடுத்துவதாக இருக்கிறதா? சற்றே நிதானித்து, வேத வசனத்தின் வெளிச்சத்தில் தேவ சித்தம் அறிவோம் **(ஆகாய் 1:5,7)**

## விசுவாசத்தினாலே மோசே எகிப்தை விட்டுப்போனார்

**எபி 11:27** "விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்."

விசுவாசத்தினாலே மோசே எகிப்தை விட்டுப்போனார் என்பது நாம் கற்கின்ற அடுத்த பாடமாயிருக்கின்றது. மோசேக்கு எகிப்தை விட்டுப்போதல் என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அவன் பார்வோனை எதிர்த்து செல்ல வேண்டியிருந்தது. தனது பழைய சௌகரியமான வாழ்வை வெறுத்து செல்ல வேண்டியிருந்தது. அவனது வளர்ப்பு தாய் உட்பட நாற்பதாண்டுகளுக்கு மேலான உறவுகள் மற்றும் சிநேகிதர்கள் அனைவரையும் விட்டுச்செல்ல வேண்டியிருந்தது.

பரலோக கடவுளின் இரட்சிப்பையும், அதின் மகிமையையும், அவரது வழிநடத்தலையும் அனுபவிக்க வேண்டுமானால், நாமும் நமது பாவமாகிய பழைய எகிப்தை விட்டுவிட்டு செல்ல வேண்டும். ஆம்! நாம் பாவம் செய்ய காரணமான எல்லவற்றையும் விட்டுவிட்டு செல்ல வேண்டும். அது பொருளாகவோ, நபராகவோ அல்லது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். பாவம் செய்ய தூண்டுகின்றவைகளுக்கு எதிராக நாம் நடக்க வேண்டிய விதத்தை குறித்த நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் போதனை மிக கடினமானதாக இருந்தது. அந்த கடினம்தான் நாம் அவைகளை விட்டுவிட வேண்டிய அவசியத்தை அழுத்தமாக நம் மனதில் பதிய வைக்கின்றது.

**மத்தேயு 18:6–9** "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லை கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும். இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம். ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ ! உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய். அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் உன் கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுள்ளவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்."

பாவங்களை தூக்கி எறிந்துவிட்டு கிறிஸ்துவின் பின் செல்கின்றோமா? அல்லது அவைகளையும் தூக்கிகொண்டு செல்கின்றோமா? அதாவது ஆண்டவரின் பின்னே செல்ல வந்த பின்பும் பாவத்தை தொடர்ந்துக் கொண்டிருக்கின்றோமா? அப்படி இருந்தால் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த அவல நிலையில் இருந்து அவசரமாக உடனடியாக திருந்தி ஆக வேண்டும். ஆம்! நாம் மாறித்தான் ஆக வேண்டம். ஏனெனில் பழையவைகளை ஒழித்தலே கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பமாக இருக்கின்றது. **2கொரி 5:17** "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதான."

## விசுவாசத்திகனாலே மோசே பஸ்காவை ஆசிரித்தார்

**எபி 11:28** "விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்.

விசுவாசத்தினாலே மோசே பஸ்காவை அனுசரித்தார். தங்களை விசுவாசிகள் என்று அழைத்துக்கொள்கின்ற சிலர் இன்றைய நாட்களில் தொழுகை, வேதபாட வகுப்பு, ஜெப வேளை போன்ற சபைகூடுகையை தவறவிடுகிறவர்களாக இருக்கின்றனர். பரலோக கடவுளின் வார்த்தையை விசுவாசிக்கின்ற நாம் ஒவ்வொருவரும், அவ்வார்த்தைக்கு கட்டுப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். சபைக்கூடுகை பற்றிய நமக்கான கட்டளையை எபிரேயர் புத்தகத்தில் நாம் படிக்க முடியும் **எபி 10:24–25** "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்: நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்."

எங்களுக்கு விசுவாசம் இருக்கு, அதை நாங்கள் சபைக்கூடுகைகளில் கலந்துக்கொண்டுதான் நிரூபிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அப்படி கலந்துக்கொள்கிறவர்கள் எல்லாம் விசுவாசத்துடன் வாழ்கின்றார்களா? நாங்கள் வேண்டுமென்றே தவறவிடவில்லையே. எங்கள் சூழ்நிலை தேவனுக்கே தெரியும் என மிகப்பெரிய கேள்விகளை கேட்பவராக நீங்கள் இருந்தால், உங்களுக்கான பரிசுத்த ஆவியின் பதில்களை கவனியுங்கள். **யாக்கோபு 2:17–20**

"அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் . ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக்காண்பி, நான் என் விசுவாசத்தை என்கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய். அப்படிச் செய்கிறது நல்லதுதான்: பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ?"

சபைக்கூடுகைகளை பற்றி தாவீதின் மனதைப் பாருங்கள் **சங் 122: 1** "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்." மற்றும் **சங்கீதம் 84:10** "ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது: ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்.'' மேலும், **சங்கீதம் 116:12,13** "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கும் என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்."

பரலோக கடவுளை தேடுவதில் நம்முடைய மனது எப்படி இருக்கிறது என்பதை சோதித்தறிவோம். நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து சொன்னதை நினைவில்கொள்வோம் மற்றும் அதை செயல்படுத்துவோம் **மத்தேயு 6:33** ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்: அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்பட்டது."

இறுதியாக, அன்பானவர்களே! நாம் விசுவாசத்தினாலே மோசே செய்தவைகளை கற்றறிந்தோம். மோசே விசுவாசத்தினாலே என்ன பெற்றுக்கொண்டான் என்பதல்ல, மாறாக விசுவாசத்தினால் என்ன கொடுத்தான் என்பதே நான் அறிந்த காரியம். விசுவாசம் ஒருவருக்கு என்ன செய்தது என்பதைவிட, ஒருவருக்குள் என்ன செய்தது என்பதே சிறந்தது. அதாவது விசுவாசம் ஒருவருக்கு என்ன பெற்று தந்தது என்பதைவிட, ஒருவரை என்னவாக மாற்றியது என்பது சிறப்பானதாகும். என்னிடத்தில் ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தினை நான் போரடி காத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அந்த விசுவாசம் என்னை இவ்வுலகத்தின் தேவைகளை (பரலோகத்தில்) தேவனை சந்திக்க தகுதிப்படுத்துவதற்கு அருளபட்டதாகும். நம்முடைய விசுவாசம் நம் வாழ்வில் ஏதோ ஒன்றையல்ல நம் வாழ்வையே பரலோக கடவுளுக்கு உகந்தாக மாற்ற, நம்மைநாமே உப்புக்கொடுத்து, மோசேயை போல விசுவாசத்துடன் செயல்படுவோம். பரலோக கடவுள் உதவிபுரிவாராக!.

– அன்புடன்,
**ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# மோசேயின் ஜெபம்



பெண்கள் பகுதி
சகோதரி : பேபி ராஜா

அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இந்த மாதம் இஸ்ரவேல் மக்களுக்காக மோசே செய்த ஜெபத்தை பற்றி தெரிந்துக்கொள்வோம்.

நாம் அனைவருக்கும் ஜெபிக்கின்ற பழக்கம் உடையவர்கள். சிலர் இரவு மட்டும், சிலர் இரண்டு வேளை, சிலர் மூன்று வேளை, சிலர் அடிக்கடி, இன்னும் சிலர் இடைவிடாமல் என நாம் அனைவரும் ஜெபிக்கின்றவர்களாக இருக்கின்றோம். நாம் யாரை நோக்கி, எப்படி, எதற்காக, யாருக்காக, ஏன் ஜெபிக்கின்றோம் என்பது மிக முக்கியமானதே. ஆயினும் இந்த நாளில் இவைகளை குறித்து ஆராயாமல் மோசே பரலோக கடவுளிடம் ஜெபித்த ஜெபத்தின் முக்கியமான சாராம்சங்களை அறிந்துகொள்வோம்.

எண்ணாகம் 14ம் அதிகாரத்தில் இஸ்ரவேல் மக்கள் அவிசுவாசத்தினாலே மோசேக்கு விரோதமாகவும், ஆரோனுக்கு விரோதமாகவும், முறுமுறுத்தார்கள். "இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டுவந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள். பின்பு அவர்கள் ; நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்." **(எண் 14:2–4 ).**

மோசே ஜனங்கள் அழிந்துவிடாதபடி, அவர்களை கர்த்தர் மன்னித்து வாழவைக்கும்படியாக அவர்களுக்காக அவரிடம் கெஞ்சி மன்றாடினார். "மோசே கர்த்தரை நோக்கி : எகிப்தியர் இதைக் கேட்பார்கள்; அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே. கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள், இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள். ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார் : கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக் கூடாதேபோனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே. ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவரென்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும் நீர் சொல்லியிருக்கப்படியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக, உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான்." **(எண் 14:13–19 ).**

இங்கே மோசே எப்படி ஜெபித்தார் என்பது எவ்வளவு சிறப்பானதோ, அதை விட அவர் யாருக்காக ஜெபித்தார் என்பது மிகவும் சிறப்பானதாக இருக்கின்றது. மோசே யாருக்காக ஜெபித்தார்? தன்னுடைய குடும்பத்திற்கா? இல்லை. தனது உறவினர்களுக்கா? இல்லை. தன்னை நேசிக்கிறவர்களுக்கா? இல்லை. பிறகு யாருக்காக ஜெபித்தார்? மோசே யாருக்காக அர்பணிப்புடன், தியாகம் செய்து வாழ்ந்தாரோ, அவர்கள் நன்றியற்றவர்களாய் தன்னை வெறுத்து, நீ எங்களுக்கு தலைவன் இல்லை, நீ மிகவும் கெடுதல் செய்துவிட்டாய் என தன்னை வெறுத்து, தன்னை பற்றி அவதூறு செய்த மக்களுக்காக ஜெபித்தார். ஏற்கனவே, ஒருமுறை அவர்கள் செய்த விக்கிரக ஆராதனை என்னும் சாபத்தீடான பாவத்தினால், அவர்களை அழிவிலிருந்து காக்கும்படி, மோசே தன்னையே முற்றிலும் அழிக்க முன்வந்திருந்தார் **(யாத்திராகமம் 32:31–32).** ஆயினும் ஜனங்கள் அதனை மறந்தனர். ஆம்! மோசே ஒரு நன்றி உணர்வற்ற மக்களுக்காக ஜெபித்தார். அவர்களை கர்த்தர் மன்னித்து வாழவைக்கும்படி ஜெபித்தார்.

நாம் யாருக்காக, எப்படி ஜெபிக்கிறோம்? என்பதனை சிந்தித்துபார்க்க வேண்டும். நமக்காக கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை உற்றுநோக்குவோம். **மத்தேயு 5:44** “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.”

நாம் அப்படி அவர்களுக்காக வேண்டுதல் செய்வதினால், நாம் கடவுளுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என நமது செல்வாக்கை இந்த உலகத்தின் மீது செலுத்துகிறோம். **மத்தேயு 5:45** “இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பரம பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.”

நாம் பரலோக கடவுளையும், அவரது குமாரனாகிய நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவையும், அவரது புதிய ஏற்பாட்டு உபதேசமாகிய சத்தியத்தையும் நேசிக்கிறபடியால், நமக்காக, நம்மை சார்ந்தவர்களுக்காக, நாம் நேசிக்கிறவர்களுக்காக அனுதினமும் ஜெபிப்பது போல, நம்மை அடிமனதிலிருந்து வெறுத்து, நாம் வாழவே கூடாது என்று கங்கனம் கட்டிக்கொண்டு நமக்கு எதிராக சதிசெய்கிறவர்களுக்காக, சபிக்கிறவர்களுக்காக நாம் ஜெபம் செய்வோம். இது கடினமானதாக தோன்றினாலும் மிகச்சிறந்த தீர்மானம். அதை இன்றிலிருந்தே துவங்குவோம். பரலோக கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்.

பொதுவான செய்திகள்

# கபசுர குடிநீர் குடிப்பதால் பயன் என்ன ?

கபசுர குடிநீரை குடிப்பதால் ஏற்படும் பயன் குறித்து கோவை அரசு ஆஸ்பத்திரி முன்னாள் மருத்துவ இருப்பிட அதிகாரி டாக்டர் சவுந்திரவேல் கூறியதாவது–:

கபம் என்றால் சளி, சுரம் என்றால், காய்ச்சல், அதாவது சளி, காய்ச்சலை அகற்றுவதன் கபசுரம் ஆடாதோடா இலை, கற்பூரவல்லி, சுக்கு, மிளகு, உள்பட 18 வகையான மூலிகை பொருட்க்களை கலந்து செய்ததுதான் கபசுர குடிநீர் இதில் நிலவேம்பு கசாயமும் சேர்க்கப்பட்டு உள்ளது

பன்றி காய்ச்சல், டெங்கு காய்ச்சல் ஆகியவை வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைவருக்கும் நிலவேம்பு கசாயம் கொடுக்கப்பட்டது தற்போது கொரோனா இதனால் பலர் இந்த கசாயத்தை வாங்கி குடித்தனர். அரசு சார்பிலும் இந்த குடிநீர் வைரஸ் பரவுவதை தடுக்க கபசுர குடிநீர் பல இடங்களில் வழங்கப்பட்டு வருகிறது வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இது கொரோனா வைரசுக்கான மருந்து இல்லை கபசுர குடிநீர் நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் குடிநீர்தான். குடிக்கும் போது சளி இருந்தால் அதை எளிதாக அகற்றி விடும் அது போன்று நுரையீரலில் உள்ள அணுக்களின் அளவை அதிகரித்து எளிதாக சுவாசிக்ககூடிய பலனையும் கொடுக்கிறது.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகதான் இந்த கபசுர குடிநீரை அனைவரும் குடிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. சில இடங்களில் அதை குடிநீராகவே அதை பொதுமக்கள் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் சில இடங்களில் பொடியாக கொடுக்கிறார்கள் வழங்குகிறார்கள்.

ஒரு வீட்டில் 5 பேர் இருந்தால் 5 கிராம் கபசுர பொடியை எடுத்து பாத்திரத்தில் போட்டு 5 தம்ளர் தண்ணீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைக்க வேண்டும் . நீங்கள் ஊற்றிய தண்ணீர் பாதியாக குறையும் அளவுக்கு காய்ச்ச வேண்டும். பின்னர் ஒவ்வொருவரும் அரை தம்ளர் அளவுக்கு காலை, மாலை என 5 நாளுக்கு குடித்தால் சளி, காய்ச்சல் எதுவும் வராது.

காலையில் குடிக்கும்போது சாப்பிட்டுவிட்டு குடிக்ககூடாதுவெறும் வயிற்றில் குடித்தால் தான் உடலில் உள்ள சளி அதை பொதுமக்கள் எனவே இந்த நடைமுறையை பின்பற்றி கபசுர குடிநீரை குடித்தால் நல்லது குறையும். இதை அனைவரும் பின்பற்ற வேண்டும் இதில் நிலவேம்பு கசாயமும் சேர்ந்து இருப்பதால், உடலுக்கு நல்லது.

நன்றி – மாலை மலர் (13 ஏப்ரல். 2020)

# மோசேயின் கோபம்

சகோ. ஜோசப் பிரதீப்

அன்பான வாலிபர்களே! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு தொடர் ஓட்டப்பந்தயங்களில் ஓடுகின்ற நபர் வெற்றி பரிசான தங்கப்பதக்கத்தை பெற, தன் உடலை, நேரத்தை, சக்தியை, புத்தியை, அதற்கென்று செலவழித்து அநேக ஆண்டுகள் கடினப்பட்டு உழைத்து, அந்த இறுதிப்போட்டிக்கு தன்னை தயார் செய்திருப்பார். அப்படி தன்னை தயார் படுத்திக்கொண்ட அவர் வெற்றிக்கோட்டினை தொடும் முன்பு திடீரென்று தடுமாறினால் அவரது இத்தனை ஆண்டு உழைப்பு, முயற்சி, பிரயாசம் அனைத்தும் வீணாகிவிடும் அல்லவா!. ஆம், அப்படிப்பட்ட காரியம் மோசேயின் வாழ்விலும் நிகழ்ந்தது. அதை பற்றி தான் இந்த மாதம் படிக்க போகிறோம். படிப்போமா?

மோசேயின் சாந்தகுணத்தை பற்றி நாம் வேதாகமத்தில் வாசிக்கின்றோம் **எண் 12:3** "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்." இப்படிப்பட்ட சாட்சி பெற்ற மோசே, ஒருமுறை அநீதியை கண்டு கோபப்பட்ட போது, அது கோலையில் முடிந்தது **(யாத் 2:11-12).** இன்னொருமுறை இஸ்ரவேலர் செய்த பாவத்தை கண்டு கோபப்பட்டதினால், தேவன் தாமே அவரது கரத்தினால் எழுதிக்கொடுத்த கற்பலகைகள் உடைந்துபோனது **(யாத் 32:19).** எண்ணாகம் 20ம் அதிகாரத்தில், இஸ்ரவேலர்களின் அவிசுவாசத்தினை கண்டு, கோபத்தினால் அவசரப்பட்ட போது, பேச வேண்டிய கன்மலையை அடித்து தேவ கட்டளையை மீறினார். விளைவு அவரால் கானான் தேசத்திற்குள் செல்ல முடியவில்லை. 40 ஆண்டுகளாக எதற்காக கடினப்பட்டு, தியாகத்துடன் வாழ்ந்தாரோ அதனை பெறாமலே மரித்துப்போனார். **எண் 20:12** "பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்தரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்திற்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்."

**மத்தேயு 5:5** "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்''. பூமியையே சுதந்தரிக்க வேண்டிய சாந்தகுணத்தை உடைய மோசேயால், கானான் தேசத்திற்குள் செல்ல முடியாமல் போனது. காரணம் அவரது கோபம். வேதாகமம் செவல்வதை கவனியுங்கள். "மனிதனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" **(யாக் 1:21).** தேவனுடைய மனுசனாகிய மோசேயால்கூட அதை சீராக செய்ய முடியவில்லை. நம்மாலும் முடியாது. கோபப்படவே கூடாது என்கிறீர்களா? என்று நீங்கள் கேட்கலாம். கோபப்படக்கூடாது என்று வேதம் சொல்லவில்லை. நம்முடைய கோபத்தின் அடுத்த நிலை பாவமாக இருந்துவிடக்கூடாது என்றே எச்சரிக்கின்றது. **எபே 4:26** "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது;"

விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, சோகம், என்பது போல கோபம் என்பதும் ஒருவகையான உணர்ச்சி தான். அந்த உணர்ச்சியை நாம் மேலோங்கவிடாமல், அதனை நேர்த்தியாக கட்டுப்படுத்த தெரிந்திருக்க வேண்டும். 'எனக்கு கோபம் வந்தா, நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது' என பெருமையாக அநேகர் இப்படி சொல்வதை நாம் கேட்டிருக்க முடியும். இது மிகவும் அவமானமான வார்த்தை என்பதை புரியாமல் பேசுகின்றனர். நாம் உணர்ச்சிக்கு கட்டுபடுகிறவர்களாக இல்லாமல் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். கோபப்பட்டு தாயை நிந்திப்பது, தகப்பனை உதாசினம் செய்வது, பெரியவர்களை ஏளனம் செய்வது, முரட்டுத்தனமாக வீராப்புடன் முட்டாளாக நடப்பது, மனதிற்குள் வன்மம் வைத்து பழிவாங்குவது போன்றவற்றை விட்டுவிட வேண்டும். கோபம் இழப்புகளை தான் கொண்டுவரும். ஆகையால் நமது ஆண்டவரை போல பொறுமையாக, சாந்தமாக, தாழ்மையாக இருப்போம் **(மத் 11:29).**

### சென்று மாதம் விடுபட்டவர்கள்

1. R. சரோஜா - தென்கலம்
2. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
3. Mr. டேவிட் சாந்தகுமார் - நெல்லை
4. Mrs. குளோரி திலகவதி - சென்னை

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. S. கனிஷ்கா - கரூர்
2. M. ஜோனத்தான் - கரூர்
3. M. ராஜா - கரூர்

# மோசேயின் பிறப்பு

அன்புள்ள செல்லப்பிள்ளைகளே! எல்லாரும் சுகமாய் இருக்கிறீர்களா? இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்கு என் வாழ்த்துக்கள். உங்களுக்காக ஜெபிக்கின்றோம். இந்த மாதம் நாம் மோசேயின் பிறப்பைப் பற்றி பார்ப்போம்.

எகிப்து நாட்டை யோசேப்பை பற்றி அறியாத ஒரு புதிய ராஜா அரசாண்டார். அவன் தன் நாட்டு மக்களை அழைத்து, நம்மிடத்திலே அடிமைகளாக இருக்கும் எபிரெயர்கள் (இஸ்ரவேலர்கள்) நாளுக்கு நாள் அதிகமாக பலுகி பெருகுகிறார்கள். அது நமக்கு மிகவும் ஆபத்து. எனவே, நாம் அவர்களுக்கு கடினமாக பற்பல வேலைகளை கொடுத்து துன்பப்படுத்த வேண்டும் என்றான். ஆனால், அவர்களை எவ்வளவாய் ஒடுக்கினார்களோ அவ்வளவாய் எபிரெயர்கள் பெருகினார்கள். ஆகவே, எகிப்து ராஜா மிகவும் பயந்து மருத்துவச்சிகள் இரண்டு பேரை அழைத்து எபிரெய பெண்களுக்கும் பிரசவம் பார்க்கும்போதும் அவர்களுக்கு பிறப்பது ஆண்பிள்ளைகளென்றால் கொன்று விடுங்கள், பெண் பிள்ளைகளென்றால் அவர்களை உயிரோடே விட்டுவிடுங்கள் என்று கட்டளையிட்டான்.

ஆனால், அவர்கள் ராஜா சொன்னதை கேட்காமல், தேவனுக்கு பயந்து ஆண்பிள்ளைகளை காப்பாற்றினார்கள். எனவே, எபிரெயர்கள் மிகவும் பெருகினார்கள். உடனே ராஜா எபிரெயர்களுக்கு பிறக்கும் எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்யும்படி சொன்னான். இப்படிபட்ட காலத்தில் எபிரெயர்களாகிய ஒரு கணவன் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அவன் மிகவும் அழகாக இருந்தான். அவன் தாய் அந்த குழந்தையை மூன்று மாதம் ஒளித்து வைத்து வளர்த்தாள். அதற்குமேல் அவளால் குழந்தையை மறைத்து வைக்க முடியவில்லை. எனவே, அவள் நாணல் என்ற ஒருவகை புல்லினாலே ஒரு பெட்டியை செய்து அதில் குழந்தையை வைத்து, அதை நதியின் ஓரத்திலே புல்லுள்ள ஒரு இடத்திலே விட்டு விட்டாள். அந்த குழந்தைக்கு என்னவாகிறது என்று கவனிக்கும்படி, குழந்தையினுடைய சகோதரி மிரியாமிடம் பொறுப்பை ஒப்படைத்தாள்.

அந்த நேரத்தில் அந்த ஆற்றிலே எகிப்து ராஜாவின் மகள் தன் வேலைக்காரிகளோடு குளிக்க வந்திருந்தாள். அப்பொழுது அவள் திடீரென்று அந்த நாணல் பெட்டியை கண்டாள். அதை அவளுடைய வேலைகாரிகளிடம் சொல்லி எடுத்து வரச்செய்தாள். அதை திறந்து பார்த்தபோது, அதில் ஒரு அழகிய ஆண் குழந்தை அழுது கொண்டிருந்தது. அவள் அந்த குழுந்தையை கண்டு மிகவும் இரக்கமுற்று, இது ஒரு எபிரேய குழுந்தை என்றாள். அப்பொழுது அந்த குழுந்தையின் சகோதரி அங்கு வந்தாள். இந்த குழந்தையை உங்களுக்காக வளர்க்க ஒரு எபிரெய பெண்ணை வரச்சொல்லவா? என்று பணிவுடனே கேட்டாள். உடனே அந்த இளவரசி சரி என்றாள். அந்த பெண் போய் அக்குழந்தைக்கும் தனக்கும் தாயாகிய தனது தாயை அழைத்து வந்தாள். இளவரசி அந்த குழந்தையை அவளிடம் கொடுத்து வளர்க்க சொன்னாள் . அதற்காக சம்பளம் கொடுக்கிறேன் என்றாள். அவள் அந்த குழந்தையை வளர்த்தாள். அவன் வளர்ந்து பெரியவனான பின்பு அவனை பார்வோனுடைய மகளாகிய இளவரசியிடம் கொண்டு போய் கொடுத்து விட்டாள். அப்பொழுது இளவரசி, தண்ணீரிலிருந்து எடுத்தப்படியால் அவனுக்கு மோசே என்று பெயரிட்டாள்.

குட்டீஸ், எந்த ராஜா, யாரை அழிக்கும்படி சதி திட்டம் தீட்டினானோ, அவனது பணத்தினால், அவனது பாதுகாப்புடன், ஒடுக்கபட்ட மக்களை காப்பாற்ற ஒரு இரட்சகனை எழுப்பினார் என்றால், யார் எவ்வளவு தீங்கு செய்து நம்மை அழிக்க முயன்றாலும், நாம் தேவனை நம்பும் பட்சத்தில், அவர் நிச்சயமாக நம்மை காப்பாற்றுவார். நாம் அவரை உறுதியாக விசுவாசிப்போம்.

**மனப்பாட வசனம்: 2தெச 3:3**

“கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்.”

– பெவர்லி கிங்ஸ்லி

## சிறுவருக்கான கேள்விகள்

1. மோசேக்கு பெயர் சூட்டு, தன்னுடைய மகனாக அவனை வளர்த்தது யார்?
2. மோசே சொன்ன சாக்குபோக்குகளை, கடவுள் என்ன செய்யவில்லை?
3. பத்து விதமான வாதைகள் யாருக்கு வந்தது?
4. இஸ்ரவேலர் கடந்து செல்ல செங்கடல் என்னவானது?
5. நாமும் பரலோக கடவுளை முழுமையாக நம்பி, பின்பற்றும் போது அவர் என்ன செய்வார்?

# மோசேயின் அழைப்பு



கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளே! எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா? இந்த மாதம் மோசேயின் அழைப்பைக் குறித்து நாம் கற்றுக்கொள்ளலாமா?

மோசேயின் மாமா பெயர் எத்திரோ என்பவர் மீதியான் நாட்டில் ஆசாரியனாக இருந்தார். பார்வோனுக்கு பயந்து எகிப்தை விட்டு ஓடிப்போன மோசேவுக்கு இந்த எத்திரோ தான் தங்க இடமும், உண்ண உணவும், ஆடு மேய்க்கின்ற வேலையும் கொடுத்தார். மேலும் தன்னுடைய மகளை மோசேவிற்கு திருமணமும் செய்து கொடுத்தார். ஆகையால், மோசே அங்கேயே இருந்து, அவருடைய மாமா எத்திரோவின் ஆடுகளை கவனித்து வந்தான்.

ஒரு நாள் மோசே பாலைவத்தின் மேற்குத் திசையை ஓரேப் மலையினருகே ஆடுகளைப் மேய்ப்பதற்கு அழைத்துச் சென்றான். இது சிறிய கன்மலை, இது சீனாய் மலை என்றும், கடவுளுடைய மலை என்றும் அழைக்கப்பட்டது. அங்கே மோசே ஒரு முட்செடி எரிந்துக்கொண்டிருக்கிறதை கண்டான். முட்செடி எரிந்தது ஆனால் அதற்கு ஒரு சேதமும் ஆகவில்லை. இந்த ஆச்சரியத்தை காண மோசே அந்த செடியின் அருகில் சென்றான்.

அப்பொழுது, அந்த முட்செடியின் நடுவிலிருந்து கர்த்தர் மோசேயுடன் பேசினார். அவனை எகிப்திற்கு சென்று அங்கே அடிமைதனத்தில் கொடுமையனுபவிக்கின்ற இஸ்ரவேல் மக்களை காப்பாற்ற வேண்டும் வா என அழைத்தார். கடவுளுடைய இந்த அழைப்பை மோசே தட்டிக்கழிக்க 'எனக்கு ஒழுங்கா பேச வராது, நான் திக்கவாய், என்னை யாரும் நம்பமாட்டாங்க' என நிறைய காரணங்கள் சொன்னான். மோசே சொன்ன எந்த சாக்குபோக்குகளையும் கடவுள் ஏற்கவில்லை. ஆகையால் மோசே, கடவுளுடைய அழைப்பை ஏற்று, இஸ்ரவேல் மக்களை விடுதலைபண்ண எகிப்திற்கு சென்றார். கடவுள் அவருடனே கூட இருந்து எல்லாவற்றையும் அற்புதமான வெற்றியாக, விடுதலையாக மாறப்பண்ணினார். மோசே கடவுளுடைய அழைப்பில் உண்மையுள்ளவன்' என அவனைப் பாரட்டினார்.

பிரியமான பிள்ளைகளா! உங்களையும், தேவன் அழைக்கிறார். எதற்கு தெரியுமா? பெற்றாருக்கு கீழ்படிய, கடவுளுக்கு பிரியமாக வாழ, உண்மையாக இருக்க, ஊழியம் செய்ய, பைபிள் படிக்க, ஜெபம் செய்ய மற்றும் எல்லாருக்கும் முன்மாதிரியாக இருக்க தேவன் அழைக்கிறார். நீங்களும் அழைப்புக்கு பாத்திரமாக இருப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: பிலிப்பியர் 3:14**

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."

உங்கள் அண்ணன்
**– அன்பு ஏசுதாஸ்**

# எகிப்திலிருந்து விடுதலை



ஹாய் குட்டீஸ் ! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை எகிப்து நாட்டில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் நாட்டு மக்களை தேவன் எப்படி விடுவித்தார் என்பதை தெரிந்துகொள்வோமா ?

எகிப்து நாட்டிற்கு பஞ்சம் பிழைக்க சென்ற இஸ்ரவேலர்கள் அங்கேயே ஏறக்குறைய நானுறு ஆண்டுகளாக தங்கிவிட்டனர். நாளுக்கு நாள் அவர்களுடைய தொகை அதிகமாகி கொண்டே சென்றது. அதை கண்டு பயந்த எகிப்தின் அரசன் அவர்களை சிறுமைப்படுத்த தொடங்கினான். இஸ்ரவேலில் பிறந்த ஆண் குழந்தைகளை கொலை செய்தல், செங்கல் தயார் செய்ய பொருட்களை தராமல், செங்கல்களை அளவு குறையாமல் தர சொல்லுதல், அடித்தல், தண்டித்தல் போன்ற அநேக கொடுமைகளை அவர்களுக்கு செய்தான்.

தாங்கள் வாழ்வதையே பாரமாக நினைத்த இஸ்ரவேல் மக்கள், பரலோக கடவுளை நோக்கி, தங்களை காப்பாற்றும்படி முறையிட்டார்கள். அவர்களது கதறலை கேட்ட கடவுள் அவர்களை காப்பாற்ற, மோசே என்பவரை தெரிந்துகொண்டு, அவனை பார்வோனிடம் அனுப்பினார். மோசே நீ பார்வோனிடம் சென்று ' என் ஜனங்களை என்னை வழிபடும்படி அனுப்பிட வேண்டும் என் கர்த்தர் சொல்லுகிறார்' என்று சொல் என்றார். மோசே அதை பார்வோனிடம் சொன்னார். பார்வோனோ, ' கர்த்தரா, அது யாருப்பா ? எனக்கு தெரியாது, யாரையும் அனுப்ப முடியாது, நீ போய் உன் வேலையை பாரு, இந்த பக்கம் வந்திடாதே' என்று மோசேயை பரியாசம் ( கேலி) செய்து, பயமுறுத்தி அனுப்பிவிட்டான்.

கடவுள், பார்வோனின் இருதயக்கடினத்தினால், பத்துவிதமான வாதைகளை

(தண்டனைகளை) எகிப்திலே வர அனுமதித்தார். அதன் பிறகு பயந்து, இஸ்ரேல் மக்கள், பரலோக கடவுளை வழிபட பார்வோன் அனுப்பினான். ஆயினும் பாதிதூரம் சென்ற மக்களை திருப்பி அழைத்துவர தன் பெரிய படையோடு வந்து , செங்கடலில் மூழ்கி, தன் ராணுவத்தோடு இறந்துப்போனான் பார்வோன் ராஜா.

குட்டீஸ், நமக்கு கஷ்டம், துன்பம் வரும்போது பரலோக கடவுளிடம் வேண்டிக்கொள்வோம். அவர் நம்மை அவருடைய இரக்கத்தின்படியே விடுவிப்பார். நம்மை பாவத்திலிருந்து விடுவிக்க தன்னுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே தந்தவர். இதை செய்யமாட்டாரா? நிச்சயம் செய்வார். நாம் நம்பிக்கையோடு ஜெபிப்போம் மற்றும் ஜெயம் பெறுவோம்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 50:15**

"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய்."

**– குயினி பிரதீப்**

# செங்கடலை கடந்து செல்லுதல்

**சிறுவர் பகுதி**

அன்பான செல்லங்களுக்கு, நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள், நீங்கள் அனைவரும் நன்றாக படிக்க வேண்டுமென்று, உங்கள் படிப்பிற்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

நாம் இந்த மாதம், ஏறக்குறைய 3400 ஆண்டுகளுக்கு முன்பாக இஸ்ரவேல் மக்கள் செங்கடலை கடந்து சென்ற அற்புதமான ஒரு உண்மை பைபிள் வரலாற்று சம்பவத்தை பற்றி படிப்போம்.

சுமார் 430 ஆண்டுகளாக எகிப்து நாட்டில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் மக்கள். தங்களுடைய துன்பத்தின் மத்தியில் பரலோக கடவுளை நோக்கி வேண்டினார்கள். அவர் மோசே என்னும் தன்னுடைய ஊழியக்காரனை அனுப்பி, எகிப்தின் அரசனாகிய பார்வோனின் பெருமையை அழித்து, மனக்கடினத்தை உடைத்து, அவர்களை அற்புதமாக விடுவித்தார்.

இஸ்ரவேல் மக்கள் மிகவும் சந்தோஷமாக எகிப்தை விட்டு, பரலோக கடவுள் அவர்களுக்கு தருவேன் என்று வாக்கு கொடுத்த கானானை நோக்கி புறப்பட்டு சென்றார்கள். அவர்கள் எகிப்தை விட்டு வென்ற பின்பு, பார்வோனும் அவனுடைய வீரர்களும் அடிமை வேலை பார்க்க இருந்த, இஸ்ரவேலரை விடுதலை செய்திருக்க கூடாது. நாம் தொடர்ந்து போய் அவர்களை பிடித்து, திரும்பி இங்கே அழைத்து வருவோம் என்று ஆலோசனை பண்ணி புறப்பட்டு வந்தார்கள்.

இஸ்ரவேல் மக்களை பாதுகாக்க கடவுள் பகலிலே மேகத்தை தூணாக்கி நிழலும், இரவிலே நெருப்பினை தூணாக்கி வெளிச்சத்தையும் தந்தார். இஸ்ரவேலர்கள் செங்கடலின் அருகே வந்தனர். இந்த கடலை எப்படி கடந்து செல்வது என அவர்கள் யோசிக்கையில், பார்வோன் தன் படையை திரட்டி அவர்களை அழைத்து செல்ல வருகின்றான் என்ற செய்தி அவர்களுக்கு தெரிய வந்த போது, அவர்கள் அனைவரும் மிகவும் பயந்து, மோசேயை திட்டினார்கள்.

மோசே மக்களை நோக்கி, பயப்படாதேயுங்கள், கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார் என்று சொன்னார். நீங்கள் இப்பொழுது காண்கின்ற எகிப்தியரை இனி காண மாட்டீர்கள் என்று கர்த்தர் சொல்கிறார் என்று சொன்னார். மேலும் மோசே கடவுள் தனக்கு கட்டளையிட்டபடியே தனது கையில் இருந்த கம்பை கடலை நோக்கி நீட்டினார். என்ன ஆச்சரியம்! உடனே கடல் இரண்டாக பிளந்து, மக்கள் நடந்து செல்ல வழிவிட்டது. மக்கள் அனைவரும் கடலை கடந்து அக்கரைக்கு சென்றனர்.

மக்கள் சென்ற வழியே வந்து அவர்களை பிடித்துவிடலாம் என்று பார்வோன் தன் படையோடு நடுக்கடலருகே வந்தான். கர்த்தர் சொன்னபடியே மோசே தான் வைத்திருந்த கம்பை மறுபடியும் கடலை நோக்கி நிட்டினான். உடனே கடல் ஒன்றாக சேர்ந்தது. கர்த்தர் சொன்னபடியே பார்வோனும் அவன் படையும் முழுவதும் கடலிலே மூழ்கி, அவர்கள் அனைவரும் இறந்து போயினர். இஸ்ரவேல் மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பரலோக கடவுளை துதித்தனர்.

செல்லங்களே, நாமும் பரலோக கடவுளை முழுமையாக நம்பி, அவரை முழு மனதுடன் பின்பற்றும் போது, நம்மையும் ஆச்சரியமாக வழிநடத்துவார். தடைகளை கண்டு தள்ளாடவும் வேண்டாம். இடைஞ்சல்களை கண்டு பயப்படவும் வேண்டாம். எல்லாவற்றையும் அவர் பார்த்துக்கொள்வார். ஆகையால் அவரை முழுமையாக நம்பி, அவர் சொன்னபடியே அவரை நாம் பின்பற்றுவோம். பரலோக கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : மத். 16:24** "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்."

**– பிரியா ஆண்டனி**

# ஜூலை மாத கேள்விகள்

1. விசுவாசத்தினாலே மோசே அனுபவிக்க தெரிந்துக் கொண்டது என்ன?

2. தாவீது பிள்ளை இறந்த பின்பு என்ன செய்தார்?

3. மோசே எதை அதிக பாக்கியமென்று எண்ணினார்?

4. எல்லா மனுஷரை பார்க்கிலும் பரிதபிக்கப்பட தக்கவர்கள் யார்?

5. ஆண்டவர் இயேசு, யாருக்கு பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் என்று சொன்னார்?

6. விசுவாசம் கிரியைகளிலில்லாதிருந்தால் தன்னிலே தானே எப்படி இருக்கும்?

7. முதலாவது நாம் எவைகளை தேடவேண்டும் என்று ஆண்டவர் இயேசு சொன்னார்?

8. 'இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்' என இஸ்ரவேலருக்காக ஜெபித்தது யார்?

9. தேவனுடைய நீதியை நடபிக்கமாட்டாது அது எது?

10. மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் எப்படி இருந்தான்.

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-08-2020**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

**அன்பான வாசகர்களே!**

உங்களின் கனிவான வேண்டுக்கோளுக்கு இணங்க, இந்த **Covid 19**ன் ஊரடங்களால் தபால் நிலையம் சென்று, தபால் அனுப்புவது சிரமமாக இருக்கிறது என்றால் உங்கள் பதில்களை **Whatsapp** மூலம் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. சங் 103:15 | 6. உபா 7:15 |
| 2. யோவான் 1:8 | 7. சங் 91:3 |
| 3. எபி 10:39 | 8. யாத் 8:23 |
| 4. எபி 12:11 | 9. யோவான் 19:11 |
| 5. கொலே 1:16 | 10. யாத் 5:3 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
2. S. சூசை மரியான் – சென்னை
3. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
4. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
5. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
6. Mrs. மெர்ஸி ஸ்டான்லி – கோவை
7. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
8. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
9. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
10. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர் – தூத்துக்குடி
11. A.V. விர்ஜிம்ஸ் – திருச்சி
12. S. ஜெயராஜ் – கோவை
13. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுவை
14. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
15. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
16. Mrs. மேரி ராஜ் – மதுரை
17. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
18. Mrs. எமி பர்னபாஸ் – சாத்தான்குளம்
19. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
20. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
21. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
22. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
23. R.P. டேவிட் – ஏற்காடு
24. Mrs. ஈஸ்வரி முருகன் – கரூர்
25. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
26. R. சரோஜா – தென்கலம்
27. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
28. J. விஜய் – மதுரை
29. Mrs. ராணி முத்துக்குமரன் – கரூர்
30. C. முத்துக்குமரன் – கரூர்
31. S. சூசைமரியன் – சென்னை
32. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
33. Mrs. குளோரி திலகவதி – சென்னை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !


Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th July 2020
Posted at Arasaradi HPO on 10th 11th July 2020

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers